அமைச்சர் ராஜ்மோகன் சொல்றார்

எங்க அம்மா சத்தியமா சத்யபாமா அழுதாங்க..

காதில் ஓதியது என்ன என்பதற்கும் புதிய விளக்கம்

சென்னை, அக்.2: தாராபுரத்தில் முதல்வர் விஜய் பிரசாரம் செய்தபோது வேட்பாளர் சத்யபாமா அழுததை நாடகம் என கூறுகிறார்கள். என் தாயின் மீது ஆணையாக அவர் அழுதார் என்று அமைச்சர் ராஜ்மோகன் புதிய விளக்கம் அளித்தார்.

தாராபுரத்தில் நேற்று முன்தினம் முதல்வர் விஜய் பிரசாரம் செய்தார். அப்போது, தவெக வேட்பாளர் சத்யபாமா பேசும்போது, அருகில் இருந்த அமைச்சர் ராஜ்மோகனுக்கு ஒரு போன் வந்தது. உடனே, அமைச்சர் வேட்பாளர் சத்யபாமாவின் காதில் ஏதோ சொன்னார். உடனே சத்யபாமா அழுது கொண்டே பேசினார். அப்போது முதல்வர் விஜய் அவரை கட்டிப்பிடித்து ஆறுதல் கூறினார். இது, திட்டமிட்ட நாடகம் என்று சமூகவலைதளத்தில் பரபரப்பாக பேசப்பட்டு வருகிறது.

இந்த நிலையில், தாராபுரத்தில் வேட்பாளர் சத்யபாமாவிடம் கூறியது என்ன என்பது தொடர்பாக நிருபர்களிடம் அமைச்சர் ராஜ்மோகன் நேற்று விளக்கினார். அவர் கூறியதாவது:

இது மிகப்பெரிய வன்மம். எனது கடுமையான கட்டணத்தை தெரிவித்து கொள்கிறேன். அமைச்சர் அருண்ராஜ் பேசியபோதே இதே மாதிரி ஆர்கனைசர்ஸ் போன் பண்ணி ரொம்ப நேரமா முதல்வர் நிக்கிறாரு, அதனால் விரைவாக பேசி முடிக்க சொன்னார்கள்.

அதேபோன்று வேட்பாளர் சத்யபாமா பேசும்போதும், ரொம்ப நேரமா முதல்வர் நிக்கிறார். மக்கள் ரொம்ப நேரமா காத்து இருக்கிறார்கள். அதனால கொஞ்சம் வேகமாக பேசி முடிக்க சொன்னாங்க. அதைத்தான் நான் சத்யபாமாவிடம் சொன்னேனே தவிர, வேற எதுவுமே கிடையாது. இப்படி ஆதாரம் இல்லால் அபாண்டமான குற்றசாட்டு சொல்கிறார்கள். என் தாயின் மீது ஆணையாக சொல்றேன், இதுதான் நடந்தது. சத்யபாமா அழுதது நாடகம் இல்லை.

இவ்வாறு அவர் கூறினார்.

மோடியை தோற்கடிக்க முடியாது என்பதால்

தேர்தல் ஆணையம் மீதே சந்தேகப்படுகிறார் ராகுல்

தமிழக பாஜ துணை தலைவர் பேட்டி

சென்னை, அக்.2: பிரதமர் மோடியையும், பாஜவையும் தோற்கடிக்க முடியாது என்பதால் தேர்தல் ஆணையத்து மேலேயே நம்பகத்தன்மை இல்லை என்று ராகுல் கூறுகிறார் என்று பாஜ துணை தலைவர் கூறினார்.

தமிழக பாஜ துணை தலைவர் டால்பின் ஸ்ரீதர் சென்னையில் நேற்று அளித்த பேட்டி:

பிரதமரைப் பற்றியும், பாஜவை பற்றியும் பலவிதமாக பல பொய்களை, குற்றச்சாட்டுகளை தொடர்ந்து சொல்லி வருகிறார் எதிர்க்கட்சி தலைவர் ராகுல் காந்தி. பிரதமர் மோடியையும், பாஜவையும் தோற்க முடியாது என்ற நிலைமைக்கு வந்த பிறகு அவர் தேர்தல் ஆணையத்து மேலேயே நம்பகத்தன்மை இல்லை என்கிறார்.

இந்தியா கூட்டணி கூட்டத்துக்கு பினராயி விஜயன் போகவில்லை. மு.க.ஸ்டாலின் போகவில்லை. அது என்ன இந்தியா கூட்டணி என்று தெரியவில்லை.

இவ்வாறு அவர் கூறினார்.

சிறப்பு தீவிர திருத்த பணியின்போது வாக்காளர் பட்டியலில்

விடுபட்ட பெயர்களை சேர்க்க சிறப்பு முகாம்கள்

தமிழக தலைமை தேர்தல் அதிகாரி தகவல்

சென்னை, அக்.2: சிறப்பு தீவிர திருத்த பணியின் போது வாக்காளர் பட்டியலில் விடுபட்ட பெயர்களை சேர்க்க அனைத்து மாவட்டங்களிலும் சிறப்பு முகாம்கள் நடத்தப்படும் என்று தமிழக தலைமை அதிகாரி கூறியுள்ளார்.

இதுகுறித்து தமிழக தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கை:

இந்திய தேர்தல் ஆணையம் தனது 29.9.2026-ம் தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக, 'சிறப்பு தீவிர திருத்தப் பணி' (SIR) ஏற்கனவே நிறைவடைந்த மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தியுள்ளது.

அதன்படி, தொடர் திருத்த நடைமுறையின் கீழ், விடுபட்ட வாக்காளர்கள் மற்றும் இளம், முதல் முறையாக தகுதிபெறும் வாக்காளர்களை பதிவு செய்வதற்கான சிறப்பு முகாமினை தலைமை தேர்தல் அதிகாரி, மாவட்ட தேர்தல் அதிகாரிகள் மற்றும் வாக்காளர் பதிவு அலுவலர்கள் மேற்கொள்ள வேண்டும். 'படிவம் 6-உடன் இணைக்கப்பட்டுள்ள 'உறுதிமொழி படிவம்', சிறப்பு தீவிரத் திருத்த காலக்கட்டத்தில் மட்டுமே பயன்படுத்தப்படும். சிறப்பு தீவிர திருத்தம் அல்லாத காலக்கட்டங்களில், 'வாக்காளர் பதிவு விதிகள் 1960'-ன் படி பொருந்தக்கூடிய படிவங்கள் பயன்படுத்தப்படும்.

இது தொடர்பாக, அனைத்து மாவட்டங்களுடனும் நேற்று (1ம் தேதி) காணொலி வாயிலாக கூட்டம் நடத்தப்பட்டது. ஆணையத்தின் அறிவுறுத்தலின்படி, வாக்காளர் பட்டியலில் பெயர் விடுபட்ட மற்றும் தகுதி வாய்ந்த இளைஞர்கள், முதல்முறை வாக்காளர்களின் பெயர்களை பதிவு செய்வதற்கு அனைத்து மாவட்டங்களிலும் சிறப்பு முகாம்கள் நடத்தப்படும்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

நடிகர் திலகம் சிவாஜி கணேசனுடன்

பழகிய அழகிய தருணங்களை நினைவுகூர்ந்து போற்றுகிறேன்

மு.க.ஸ்டாலின் எக்ஸ் தள பதிவு

சென்னை, அக்.2: நடிகர் திலகம் சிவாஜி கணேசனுடன் பழகிய அழகிய தருணங்களை நினைவுகூர்ந்து போற்றுகிறேன் என்று மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் தனது சமூக வலைத்தளப் பதிவில் கூறியிருப்பதாவது:

"சிம்மக் குரலாலும் செழுந்தமிழ் உச்சரிப்பாலும் கம்பீர நடையாலும் திரையுலகை ஆண்ட நடிகர் திலகம் செவாலியே சிவாஜி கணேசன் பிறந்த நாள்.

இந்நாளில், நடிகர் திலகத்துடன் பழகிய அழகிய தருணங்களையும், ஈடு இணையற்ற அவரது நடிப்பாற்றலையும் நினைவுகூர்ந்து போற்றுகிறேன். இவ்வாறு பதிவில் கூறப்பட்டுள்ளது.

गणितीय विज्ञान संस्थान, चेन्नई
THE INSTITUTE OF MATHEMATICAL SCIENCES, CHENNAI
(Department of Atomic Energy, Govt. of India)

अक्टूबर / October 01, 2026

विज्ञापन संख्या / Advt No.04-R/IMSc/2026

गविसं द्वारा नियमित संकाय पदों (7 वें सीपीसी के तहत वेतन मैट्रिक्स में स्तर-12 एवं स्तर-13) पर सीधी भर्ती हेतु ऑनलाइन आवेदन आमंत्रित किए जाते हैं। विस्तृत जानकारी के लिए, कृपया हमारी वेबसाइट देखें:
https://www.imsc.res.in/facultyrecruitment

IMSc invites online applications for Direct Recruitment for filling up of regular Faculty positions (Level-12 and Level-13 in Pay Matrix under 7th CPC). For more details, please visit our website https://www.imsc.res.in/facultyrecruitment.

Sd/-
कुलसचिव / REGISTRAR

கல்வி உதவித்தொகை வழங்கி சிறுமிகளை சீரழித்த விவகாரம்

தொழிலதிபர் ஜெம் வீரமணி, தோழி சாந்தி உள்பட 3 பேர் குண்டர் சட்டத்தில் கைது

சென்னை போலீஸ் கமிஷனர் அமல்ராஜ் நடவடிக்கை

சென்னை, அக்.2: தமிழகத்தின் முன்னணி தொழிலதிபரான ஜெம் கிரானைட் வீரமணி, தனது தோழியான சாந்தி மற்றும் அவரது கணவர் மகேந்திர சிம்கன் உதவியுடன் அறக்கட்டளை தொடங்கி அதன் மூலம் பள்ளி மற்றும் கல்லூரிகளில் படித்து வரும் மாணவிகளுக்கு கல்வி உதவித்தொகை வழங்குவதாக, 18 வயதுக்குட்பட்ட சிறுமிகளை சீரழித்துள்ளார். இதுகுறித்து அளிக்கப்பட்ட புகாரின் படி, விபசார தடுப்பு பிரிவு போலீசார் வழக்கு பதிவு செய்து, ஜெம் கிரானைட் வீரமணி, அவரது தோழியான சாந்தி, அவரது கணவர் மகேந்திர சிம்கன் ஆகியோரை கடந்த ஆகஸ்ட் 29ம் தேதி கைது செய்து சிறையில் அடைத்தனர்.

இந்த வழக்கில் வீரமணிக்கு அனைத்து உதவிகளையும் செய்ததாக அவரது முன்னாள் உதவியாளர் கணேசன் கைது செய்யப்பட்டார். பின்னர் வீரமணி உள்பட 4 பேரிடம் நடத்தப்பட்ட விசாரணையில், கடந்த 30 ஆண்டுகளாக நூற்றுக்கும் மேற்பட்ட சிறுமிகள் சீரழிக்கப்பட்டது தெரியவந்தது. அதைதொடர்ந்து இந்த வழக்கை முழுமையாக விசாரணை நடத்தும் வகையில், காவல்துறை டிஜிபி மகேஷ்குமார் அகர்வால் கடந்த 24ம் தேதி ஐஜி தேன்மொழி தலைமையில் 'சிறப்பு புலனாய்வு குழு' (எஸ்ஐடி) அமைத்து உத்தரவிட்டார். அந்த குழுவில் இடம் பெற்று விசாரணை நடத்தி வந்த துணை கமிஷனர் சீதாஞ்சலி இதற்கு முன்பு இந்த வழக்கை விசாரித்ததால், அவரை எஸ்ஐடி குழுவில் இருந்து விடுவித்து, அவருக்கு பதில் கீழ்ப்பாக்கம் துணை கமிஷனர் கீதா நியமிக்கப்பட்டுள்ளார்.

அதே நேரம், ஜெம் வீரமணியால் பாதிக்கப்பட்டதாக 'சிறப்பு புலனாய்வு குழு'விடம் நேற்று வரை 15 புகார்கள் வந்துள்ளதாக தற்போது தகவல் வெளியாகி உள்ளது. எஸ்ஐடி குழுவிடம் அளிக்கப்பட்ட புகாரின் மீது நடத்தப்பட்ட விசாரணையை தொடர்ந்து ஜெம் வீரமணி மீது மொத்தம் 3 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு உள்ளது.

மேலும், ஜெம் வீரமணி மீது பலர் எஸ்ஐடி அறிவித்த வாட்ஸ் அப் எண்ணில் அதிகளவில் புகார்கள் வருகிறது. இதையடுத்து ஜெம் வீரமணி மற்றும் அவரது தோழி சாந்தி, மகேந்திர சிம்கன் ஆகியோரை குண்டர் தடுப்பு சட்டத்தின் கீழ் கைது செய்ய சென்னை போலீஸ் கமிஷனருக்கு ஐஜி தேனிமொழி தலைமையிலான 'எஸ்ஐடி' முழு பரிந்துரை செய்துள்ளது. அந்த பரிந்துரையின்படி, சென்னை போலீஸ் கமிஷனர் அமல்ராஜ் உத்தரவுப்படி நேற்று புழல் சிறையில் அடைக்கப்பட்டுள்ள ஜெம் வீரமணி உள்பட 3 பேரையும் போலீசார் குண்டர் தடுப்பு சட்டத்தின் கீழ் கைது செய்து சிறையில் அடைத்தனர். அதேபோல், பெசன்ட் நகரில் தவெக பிரமுகர் கண்ணன் படுகொலை வழக்கில் கைது செய்யப்பட்ட அடையறு பகுதியை சேர்ந்த சதீஷ்குமார் (26), ஹரிகரன் (20), பரணிதரன் (20), ராகேஷ் (20), கொரட்டூர் பகுதியை சேர்ந்த மணிகண்டன் (20) ஆகியோரும் குண்டர் தடுப்பு சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டனர்.

மேலும், சைதாப்பேட்டை பகுதியில் போதைபொருள் வழக்கில் கைது செய்யப்பட்ட கவுதமன் (22), சைதாப்பேட்டை பகுதியை சேர்ந்த ராகேஷ் (24) மற்றும் வியாசர்பாடி பகுதியில் கொலை வழக்கில் கைது செய்யப்பட்ட வியாசர்பாடியை சேர்ந்த சரத் (26), வடக்கு கடற்கரை பகுதியில் சந்துரு என்பவரை கொலை செய்ய முயன்ற வழக்கில் கைது செய்யப்பட்ட மண்ணடியை சேர்ந்த பரத் (23), கொடுங்கையூர் பகுதியில் கொலை முயற்சி வழக்கில் கைது செய்யப்பட்ட விஜய் (எ) ஜாக்கி (22), வண்ணாரப்பேட்டை பகுதியில் போதைபொருள் வழக்கில் தொடர்புடைய மதன் (21) என மொத்தம் 14 பேரை போலீசார் கமிஷனர் உத்தரவுப்படி குண்டர் தடுப்பு சட்டத்தின் கீழ் கைது செய்தனர்.

ஜெம் வீரமணி மீது 4வது வழக்கு பதிவு

சிறப்பு புலனாய்வு குழு நேற்று வெளியிட்ட அறிக்கை: சிறுமிகள் மற்றும் பாதிப்பிற்குள்ளான சிறுமிகளின் உறவினர்கள் கொடுத்த புகார்கள் உள்பட இதுவரை 4 வழக்குகள் பல்வேறு சட்ட பிரிவுகளின் கீழ் பதிவு செய்யப்பட்டு, விசாரணையில் உள்ளன. பாதிப்புக்குள்ளான சிறுமிகள் குறித்த தகவல்களை தர கொடுக்கப்பட்ட 9345319676 என்ற வாட்ஸ் அப் எண்ணில் இதுவரை 5 உபயோகமான தகவல்கள் பெறப்பட்டு, விசாரணை செய்யப்பட்டு வருகிறது. இந்த வழக்கு தொடர்பாக தொடர்ந்து தீவிர விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என கூறப்பட்டுள்ளது.

வணிக காஸ் சிலிண்டர் விலை உயர்வு

சென்னையில் ரூ.66.50 உயர்ந்து ரூ.2,983க்கு விற்பனை

டீ, காபி, உணவுப் பண்டங்கள் விலை உயரும்; பொதுமக்கள் தலையில் கூடுதல் சுமை

சென்னை, அக். 2: சென்னையில் வணிகப் பயன்பாட்டிற்கான 19 கிலோ எடை கொண்ட சிலிண்டர் விலை ரூ.66.50 உயர்ந்து ரூ.2,983க்கு விற்பனை செய்யப்படுகிறது.

சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய்யின் விலை மற்றும் அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு ஆகிய வற்றை கணக்கில் கொண்டு எண்ணெய் நிறுவனங்கள் பெட்ரோல், டீசல் மற்றும் சமையல் காஸ் சிலிண்டர் விலைகளை நிர்ணயித்து வருகின்றன. சமையல் காஸ் சிலிண்டர் விலையை மாதத்தின் முதல் தேதியில் மாற்றி அமைந்து வருகின்றன. இந்த ஆண்டின் தொடக்கம் முதலே அமெரிக்கா மற்றும் ஈரான் இடையிலான போர் பதற்றம் காரணமாகச் சமையல் எரிவாயு உள்ளிட்ட அனைத்து எரி பொருட்களின் விலையும் உயர்ந்தது. குறிப்பாகச் சென்னையில் வணிகப் பயன்பாட்டிற்கான சிலிண்டர் விலை ஜனவரி மாதத்தில் ரூ.110, மார்ச்சில் ரூ.144, ஏப்ரல் மாதம் ரூ.203, மே மாதம் ரூ.990, ஜூன் மாதத்தில் ரூ.46 என விலை உயர்த்தப்பட்டது. இதனால் பல உணவகங்கள், தொழிலகங்கள் மூடப்பட்டன. டீ, காபி, ஓட்டல்களில் உணவு பண்டங்கள் விலையும் கடுமையாக உயர்ந்தது. சமையல் எரிவாயு விலை உயர்வைக் கண்டித்து நாடு முழுவதும் போராட்டங்கள் நடத்தப்பட்டன. இதற்கிடையே மேற்கு ஆசியாவில் போர் பதற்றம் தணிந்ததன் காரணமாகக் கடந்த ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் ரூ.200 வரை குறைக்கப்பட்டது. ஆனால், கடந்த மாதம் சென்னையில் 19 கிலோ எடை கொண்ட வணிகப் பயன்பாட்டிற்கான சிலிண்டர் விலை ரூ.10.50 உயர்ந்து ரூ.2,916.50க்கு விற்பனை செய்யப்பட்டது.

இந்நிலையில், நேற்று அக்டோபர் மாதத்தின் முதல் நாள் என்பதால், சிலிண்டர் விலை நிலவரத்தை எண்ணெய் நிறுவனங்கள் வெளியிட்டுள்ளன. அதன்படி, சென்னையில் 19 கிலோ எடை கொண்ட வணிக பயன்பாட்டிற்கான சிலிண்டர் விலை ரூ.66.50 உயர்ந்து, ரூ.2,983க்கு விற்பனை செய்யப்படுகிறது. 14.2 கிலோ எடை கொண்ட வீட்டு உபயோக சிலிண்டர் விலையில் எந்தவித மாற்றமுமின்றி ரூ.957.50க்கு விற்பனையாகிறது. இந்த விலை உயர்வு பொதுமக்களிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஏற்கனவே, பருவமழை பாதிப்பு உள்ளிட்ட காரணங்களால் விலைவாசி கடுமையாக உயர்ந்துள்ள நிலையில், இந்த வணிக எரிவாயு விலை உயர்வு மேலும் விலைவாசி உயர்வுக்கு வழிவகுக்கும் எனக் கூறப்படுகிறது. மேலும், இனிவரும் மாதங்களில் இந்தியா முழுவதும் பண்டிகை நாட்கள் வரவுள்ளதால் இனிப்பு உள்ளிட்ட உணவுப் பொருட்களின் விலையும் கணிசமாக உயரும் என்பதால், இந்த விலை உயர்வு கூடுதல் சுமையாக மாற்றக்கூடும் என பொதுமக்கள் தெரிவிக்கிறார்கள்.

3 எளிய படிகளில் கோருங்கள்:

1 உங்கள் வங்கிக் கிளைக்கு செல்லுங்கள் அல்லது வங்கி இணையதளத்தைப் பார்வையிடுங்கள்

2 உரிமை கோரும் நடைமுறை மற்றும் தேவையான ஆவணங்களைத் தெரிந்துகொள்ளுங்கள்

3 பூர்த்தி செய்யப்பட்ட உரிமை கோரும் படிவம் மற்றும் ஆவணங்களைச் சமர்ப்பிக்கவும்

தேவையான அனைத்து ஆவணங்களும் பெறப்பட்ட நாளிலிருந்து 15 நாட்களுக்குள் உரிமை கோரிய தொகை செலுத்தப்படும்

இன்றே உங்கள் நாமினியைப் பதிவு செய்யுங்கள்
உங்கள் அன்புக்குரியவர்களுக்கு உரிமை கோரும் செயல்முறையை இன்னும் விரைவாகவும் எளிதாகவும் மாற்றுங்கள்

மேலும் விவரங்களுக்கு, காணவும் https://rbikehtahai.rbi.org.in/dc
அதிகாரப்பூர்வ வாட்ஸ்அப் எண்கள் 99990 41935 / 99309 91935

பொதுநலன் கருதி வெளியிடுவோர்
இந்திய ரிசர்வ் வங்கி
RESERVE BANK OF INDIA
www.rbi.org.in

க்ரிஹம் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட்

பதிவு பெற்ற அலுவலகம்: 6 ஆவது தளம், பி பில்டிங், கங்கா ட்ரூனோ, லோஹேகான், புனே, மகாராஷ்டிரா-411014. கிளை அலகு: தரைத்தளம், 2 ஆவது பகுதி, இவான்ஸ் காம்ப்ளெக்ஸ், 14, பேலஸ் சாலை, நாகர்கோயில்-629001, கன்னியாகுமரி மாவட்டம், தமிழ்நாடு

மின்-ஏலம்- விற்பனை அறிவிப்பு சர்ஃபாசி சட்டத்தின் கீழ் கடனீட்டு அசையா சொத்து விற்பனை

பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 மேலும் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 (விதிகள்) விதி 8&9 கீழ் அசையா சொத்துகளின் மின்-ஏலம் விற்பனை அறிவிப்பு.

இங்கே உள்ள அறிவிப்பின்மூலம் பொதுமக்களுக்கு பொதுவாகவும், கடன்தாரர்கள்/ உப-கடன்தாரர்கள்/ அடமானதாரர்கள் / ஜாமீன்தாரர்களுக்கு குறிப்பாகவும் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடனீட்டுச் சொத்துகளானது க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்டின் அதிகாரப்பூர்வ அதிகாரியால், பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 பிரிவு 13 (12) இன் படியும், கடனீட்டு சொத்துகளின் (அமலாக்கம்) சட்டத்தின் பிரிவு 13(2) மற்றும் விதிகளின் 8 &9 இன் கீழ் அளிக்கப்பட்ட அதிகாரத்தின்டி கவாதீதம் செய்துள்ளார்.

கடனீட்டு சொத்துகள் அவை எங்கே உள்ளதோ, என்ன உள்ளதோ, எப்படி உள்ளதோ, அதே அடிப்படையில் மின் ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும். இதன் மூலம் பொது மக்களுக்குத் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், மின்– ஏல இயங்குதளத்தில் அதன் இணையதள லிங்க்கில் அதாவது, https://www.bankeauctions.com மூலமாக 19–10–2026 தேதியன்று மின்–ஏலம் நடைபெறும். விற்பனையின் விரிவான நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளை தெரிந்து கொள்ள க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்/கடனீட்டு கடனீட்தோரின் இணையதளம் அதாவது, www.grihumhousing.com– ஐ பார்வையிடவும்.

வ. எண்.	முன்மொழிவு எண். வாடிக்கையாளர் பெயர் (A)	கோரிக்கை அறிவிப்பு தேதி மற்றும் நிலுவைத்தொகை (B)	சுவாதீன தன்மை (C)	சொத்தின் விவரம் (D)	நிர்ணய விலை (E)	முன்வைப்புத் தொகை (நிர்ணய விலையில் 10%)(F)	முன்வைப்புத் தொகை செலுத்தும் தேதி (G)	ஏல உயர்வுத் தொகை (H)	சொத்தை பார்வையிடும் தேதி மற்றும் நேரம் (I)	ஏலத் தேதி மற்றும் நேரம் (J)	தெரிந்த விசங்கங்கள்/ நீதிமன்ற வழக்குகள் தெரிந்தது ஏதேனும் (K)
1	கடன் எண். HL00561100000005038300 ஜஸ்டின் கனகராஜ் D (கடன்தாரர்), ஜீவா கலா ஜஸ்டின் கனகராஜ் (உப கடன்தாரர்)	அறிவிப்பு தேதி: 11.11.2025 மொத்த நிலுவைத் தொகை: 11.11.2025 தேதியின்று ரூ.22,97,978/- (ரூபாய் இருபத்திரண்டு லட்சத்து தொள்ளூற்று ஏழாயிரத்து தொள்ளாயிரத்து எழுபத்தெட்டு மட்டும்) மற்றும் கடன் தொகையைத் திரும்பிச் செலுத்தும் காலம் வரையிலான கூடுதலான ஆண்டொன்றுக்கு 14.6% வட்டி.	கையக	கன்னியாகுமரி மாவட்டம், வடசேரி சார் பதிவு மாவட்டம், அகஸ்தீஸ்வரம் வட்டம், வடசேரி கிராமம், தற்போது வடசேரி மேற்கு கிராமத்தில் உள்ள கதவு எண்.80/5b, நாகர்கோயில் மாநகராட்சி, மறு சர்வே எண்.A7/117, தற்போது மறு திட்டமிட்டபடி A8 டவுன் சர்வே எண்.A–16/112 இல் உள்ள 80.96 ச.மீட்டருக்குச் சமமான 2.00 சென்ட்கள் பரப்பளவு உள்ள அனைத்து துண்டு மற்றும் பகுதி உள்ள நிலம் மற்றும் கட்டிடம் உள்ள சொத்து. **எல்லைகள்:** கிழக்கு: 2.5 மீட்டர் நடைபாதை, தெற்கு: பலவேசம் முத்துவுக்குச் சொந்தமான சொத்து, **மேற்கு:** விஜயலட்சுமியின் சொத்து, **வடக்கு:** நாராயணப் பெருமாள் சொத்து	Rs. 1850000.00/- (ரூபாய் பதினெட்டு லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்)	Rs. 185000.00/- (ரூபாய் ஒரு லட்சத்து என்பத்தைந்து தாயிரம் மட்டும்)	16-10-2026 Before 5 PM	10,000/-	13-10-2026 (11AM – 4PM)	19-10-2026 (11 AM- 2PM)	கடன்தார் கடன் மீட்பு தீர்ப்பாயம் மதுரை முன்பாக SA/412/2026– இன்படி SA தாக்கல் செய்துள்ளார். ஆனால் GHFL–க்கு எதிராக எந்த உத்தரவும் பிறப்பிக்கப் படவில்லை

ஆர்வமுள்ள ஏலதாரர்கள்/கொள்முதலாளர்கள் ஏலப்புள்ளி சமர்ப்பிப்பதற்கு முன்பாக ஏலச்சொத்துகள் தொடர்பான விவரங்கள் மற்றும் கூடுதல் கட்டணங்கள், வில்லங்கங்கள், மூன்றாம் நபர் கோருரிமைகள் போன்ற சொத்து தொடர்பான விவரங்களை தெரிந்து கொள்ள அருகில் உள்ள கடனீட்டு கடனீந்தோர் கிளைக்குச் சென்றோ அல்லது தாங்களாகவே எல்லா அம்சங்களையும் கணக்கில் எடுத்துக் கொண்டு தெரிந்து கொண்டு திருப்தியுறவேண்டும். சொத்து தொடர்பான சொத்து வரி, மின்சாரம்/தண்ணீர் ஆகியவற்றுக்கு செலுத்த வேண்டிய கட்டணங்கள் மற்றும் பிற கட்டணங்கள் உள்பட, எந்தவிதமான செலவுகளையும் பெற்றிகரமான ஏலதாரரே ஏற்க வேண்டும்.

ஆர்வமுள்ள ஏலதார்கள் மின்–ஏலத்துக்கு தேவையான பயனாளர் அடையாள முகவரி, கடவுச் சொல் ஆகியவற்றை சேவை வழங்குநரிடம் C1 இந்தியா பிரைவேட் லிமிடெட், முகவரி: மனை எண்.68, 3 ஆவது தளம், கூர்கயான், ஹரியானா–122003, உதவி எண்: 7291981124,25,26 உதவும் மின்னஞ்சல் முகவரி: Support@bankeauctions.com மூலமாகவோ, தொடர்பு நபர்: தாரணி P, மின்னஞ்சல் முகவரி: dharani.p@c1india.com, தொடர்பு எண்.9948182222 மூலமாகவோ தொடர்பு கொண்டு அவர்களிடம் இருந்து பெற்றுக் கொள்ள வேண்டும். அதன் பிறகு ஆர்வமுள்ள ஏலதார்கள் கீழ்வரும் ஆவணங்களை கயனாள்களிக்கப்பட்ட போன்றவற்றை மின்னஞ்சல் மூலமாகப் பதிவேற்றம் செய்ய வேண்டும். மின்–ஏலம் செயல்பாடு மீதான ஆன்லைன் பயிற்சியை அவர்களிடம் இருந்தே பெற வேண்டும். ஆர்வமுள்ள கொள்முதலார்/ ஏலதார்கள் அவர்களுடைய ஏல முன்வைப்புத் தொகையை (EMD) NEFT/RTGS/DD மூலமாக 'க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் ஆக்சன் ப்ரசீட்ஸ் கணக்கில்', வங்கி: ICICI BANK LTD, கணக்கு எண்.091551000028 மற்றும் IFSC Code– ICIC0000915, ஜசிஜசிஜ பேங்க் லிமிடெட், பஞ்சசீல் டெக் பார்க், கணபதி செளக் அருகில், 43/44, விமான் நகர், –411014 என்ற கிளையில் செலுத்தத்தக்கவிதமாக ஏதேனும் தேசிய வங்கியிலோ அல்லது செட்யூல்டு வங்கியிலோ **16.10.2026** தேதி அன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ செலுத்த வேண்டும். மேலும் https://www.bankeauctions.com இணையதளம் வழியே தங்கள் லாக்இன் அடையாள முகவரி மற்றும் கடவுச்சொல் மூலம் இல் பெயரை முன்னதாகவே பதிவு செய்து கட்டணமில்லா மின்–ஏல பயிற்சி பெற பயனாளர் அடையாள முகவரி, கடவுச் சொல் ஆகியவற்றை சேவை வழங்குநரிடம் இருந்து பெற்றுக் கொள்ள வேண்டும். அதன் பிறகு ஆர்வமுள்ள கொள்முதலாளர்/ஏலதார்கள் கீழ்வரும் ஆவணங்களை கயனாள்களிக்கப்பட்ட போன்றவற்றை மின்னஞ்சல் மூலமாகப் பதிவேற்றம் செய்ய வேண்டும். அவற்றின் மூல பிரதியை **தரைத்தளம், 2 ஆவது பகுதி, இவான்ஸ் காம்ப்ளெக்ஸ், 14, பேலஸ் சாலை, நாகர்கோயில்–629001** கன்னியாகுமாரி மாவட்டம், தமிழ்நாடு என்ற முகவரிக்கு அனுப்ப **வேண்டும். மேலும் கைபேசி எண். +91 8281138143, +91 9597907666 மின்னஞ்சல் முகவரி baskaran.soudarrajan@grihumhousing.com. தொடர்பு கொள்ள வேண்டும்.**

மின்–ஏலத்தில் பங்கேற்பதற்கான விரிவான நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளை தெரிந்து கொள்ள https://www.bankeauctions.com & www.grihumhousing.com– ஐ பார்வையிடவும்.

கடனீட்டு சொத்துகளின் (அமலாக்கம்) சட்டம்–2002 இன் விதி 8(6) இன் கீழ் கடன்தாரர்/ உப – கடன்தாரர் / அடமானதாரர்கள்/ ஜாமீன்தார்களுக்கு வழங்கப்படும் இந்த அறிவிப்பானது 15 நாள்கள் அறிவிப்பு என்று கருதத் தக்கதாகும்.

உள்ளூர் மொழி வெளியீட்டில் அல்லது ஆங்கில செய்தித்தாள் வெளியீட்டில் உள்ளடக்கங்களில் ஏதேனும் வித்தியாசம் இருந்தால் பிசினஸ் ஸ்டாண்டர்டு ஆங்கில செய்திதாளில் வெளியிடப்பட்ட உள்ளடக்கமே ஏற்றுக் கொள்ளக் கூடியதாகும்.

நாள்: 02.10.2026
இடம்: தமிழ்நாடு

ஒம்/–அதிகாரப்பூர்வ அதிகாரி,
க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்